# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# பத்தாம் பத்து

## ஏழாம் திருவாய்மொழி - செஞ்சொற் கவிகாள்
## தம் உடம்பில் எம்பெருமான் மிகுதியாக வைத்துள்ள விருப்பத்தை ஆழ்வார் அவனைக் கால்கட்டி விடுவித்துக் கொண்டு அவனது குணத்தைப் பாராட்டிப் பேசி அருளுதல்

** செஞ்சொற் கவிகாள்! உயிர் காத்து ஆட்செய்ம்மின் * திருமாலிருஞ்சோலை *
வஞ்சக் கள்வன் மா மாயன் * மாயக் கவியாய் வந்து ** என்
நெஞ்சும் உயிரும் உள்கலந்து * நின்றார் அறியா வண்ணம் * என்
நெஞ்சும் உயிரும் அவை உண்டு * தானே ஆகி நிறைந்தானே 1

தானே ஆகி நிறைந்து * எல்லா உலகும் உயிரும் தானேயாய் *
தானே யான் என்பான் ஆகித் * தன்னைத் தானே துதித்து * எனக்குத்
தேனே பாலே கன்னலே அமுதே * திருமாலிருஞ்சோலை *
கோனே ஆகி நின்று ஒழிந்தான் * என்னை முற்றும் உயிர் உண்டே 2

என்னை முற்றும் உயிர் உண்டு * என் மாய ஆக்கை இதனுள் புக்கு *
என்னை முற்றும் தானேயாய் * நின்ற மாய அம்மான் சேர் **
தென்னன் திருமாலிருஞ்சோலைத் * திசை கை கூப்பிச் சேர்ந்த யான் *
இன்னும் போவேனே கொலோ? * என் கொல் அம்மான் திருவருளே? 3

என் கொல் அம்மான் திரு அருள்கள்? * உலகும் உயிரும் தானேயாய் *
நன்கென் உடலம் கைவிடான் * ஞாலத்தூடே நடந்து உழக்கி **
தென் கொள் திசைக்குத் திலதமாய் நின்ற * திருமாலிருஞ்சோலை *
நங்கள் குன்றம் கைவிடான் * நண்ணா அசுரர் நவியவே 4

நண்ணா அசுரர் நவிவு எய்த * நல்ல அமரர் பொலிவு எய்த *
எண்ணாதனகள் எண்ணும் * நன் முனிவர் இன்பம் தலைச் சிறப்ப **
பண்ணார் பாடல் இன் கவிகள் * யானாய்த் தன்னைத் தான் பாடி *
தென்னா என்னும் என் அம்மான் * திருமாலிருஞ்சோலையானே 5

திருமாலிருஞ்சோலையானே ஆகிச் * செழு மூவுலகும் * தன்
ஒரு மா வயிற்றின் உள்ளே வைத்து * ஊழி ஊழி தலை அளிக்கும் **
திருமால் என்னை ஆளு மால் * சிவனும் பிரமனும் காணாது *
அரு மால் எய்தி அடி பரவ * அருளை ஈந்த அம்மானே 6

அருளை ஈ என் அம்மானே! என்னும் * முக்கண் அம்மானும் *
தெருள் கொள் பிரமன் அம்மானும் * தேவர் கோனும் தேவரும் **
இருள்கள் கடியும் முனிவரும் * ஏத்தும் அம்மான் திருமலை *
மருள்கள் கடியும் மணி மலை * திருமாலிருஞ்சோலை மலையே 7

** திருமாலிருஞ்சோலை மலையே * திருப்பாற்கடலே என் தலையே *
திருமால் வைகுந்தமே * தண் திருவேங்கடமே எனது உடலே **
அரு மா மாயத்து எனது உயிரே * மனமே வாக்கே கருமமே *
ஒரு மா நொடியும் பிரியான் * என் ஊழி முதல்வன் ஒருவனே 8

ஊழி முதல்வன் ஒருவனே என்னும் * ஒருவன் உலகு எல்லாம் *
ஊழி தோறும் தன் உள்ளே * படைத்துக் காத்துக் கெடுத்து உழலும் **
ஆழி வண்ணன் என் அம்மான் * அந்தண் திருமாலிருஞ்சோலை *
வாழி மனமே கைவிடேல் * உடலும் உயிரும் மங்க ஒட்டே 9

மங்க ஒட்டு உன் மா மாயை * திருமாலிருஞ்சோலை மேய *
நங்கள் கோனே! யானே நீ ஆகி * என்னை அளித்தானே! **
பொங்கு ஐம்புலனும் பொறி ஐந்தும் * கருமேந்திரியம் ஐம்பூதம் *
இங்கு இவ்வுயிரேய் பிரகிருதி * மான் ஆங்கார மனங்களே 10

** மான் ஆங்கார மனம் கெட * ஐவர் வன்கையர் மங்க *
தான் ஆங்காரமாய்ப் புக்குத் * தானே தானே ஆனானை **
தேன் ஆங்காரப் பொழில் குருகூர்ச் * சடகோபன் சொல் ஆயிரத்துள் *
மான் ஆங்காரத்து இவை பத்தும் * திருமாலிருஞ்சோலை மலைக்கே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---